DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 56/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : மாரிச்செல்வம் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 20.11.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 20th November 2025.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது புளியம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டிராவல்ஸ் வைத்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பத்தை போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க போட்டுக்கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்ததுஎன்று எனக்கு தெரியாது. **மேற்படி பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 08.07.2016ம் தேதி மதியம் 3 மணியளவில் நானும், என் ஊரை சேர்ந்த சமுத்திரம் என்பவரும் அ.சா.1 வீட்டுப்பக்கம் நின்றபோது அங்கு வந்த போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், சமுத்திரம் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும் கூறிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**